## அரை ஏக்கர்... 27 மூட்டை...கில்லி அடிக்கும் கிச்சடி சம்பா...!



நடவு செய்யப்பட்டிருக்கும் கிச்சடி சம்பா வயல்...



அண்ணன் சொல்லித் தரும் பசுமைப்பாடம்...



பாஸ்கரன்





திருச்சி மாவட்டம் அரியூர் கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கரன், அவர் தன்னுடைய அனுபவத்தை இங்கே பகிர்கிறார். இவருடைய நெகிழ்ச்சிக்குக் காரணம்... பல ஆண்டுகளாக இவர் தேடி வந்த கிச்சடி சம்பா நெல் ரகம் இவருக்குக் கிடைத்ததுதான்! "எனக்கு எழுதப் படிக்க தெரியாது. ஆனால், ஒவ்வொரு முறையும் 'பசுமை விகடன்' வருவதை ஆவலாக எதிர்பார்த்துக்கிட்டு இருப்பேன். என்னோட அண்ணன்தான் முழுக்க வாசிச்சு சொல்வார். அது மூலமாகத்தான் இயற்கை உரங்கள், பாரம்பரியமான ரகங்கள், கருவிகள் பத்தியெல்லாம் தெரிந்துக் கொள்கிறேன். இன்னிக்கும் எங்கேயோ இருக்கும் ஏகப்பட்ட விவசாயிகளோட எனக்கு உறவை ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருப்பது... பசுமை விகடன்தான்" என்றார்பாஸ்கரன்.

"எங்க பகுதியில் முப்பது வருடத்திற்கு முன் பரவலாக, கிச்சடி சம்பா நெல்லை சாகுபடி செய்வாங்க. அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து, ஒரு கட்டத்தில் அந்த ரகமே சுத்தமாக இல்லாமல் போய்விட்டது. நான் தேடிப் பார்த்தப்போது... விதைநெல்கூட கிடைக்கவில்லை. இந்த சமயத்தில்தான் 'ஏக்கருக்கு 74 மூட்டை! இயற்கை விவசாயத்தில்... இன்னுமொரு சாதனை!' என்று பசுமை விகடனில் (10.5.10 தேதியிட்ட இதழ்) 'கிச்சடி சம்பா' நெல் பத்தி ஒரு கட்டுரை வந்திருந்தது.

**கர்னல் கொடுத்த கிச்சடி சம்பா!**

அதைப் பயிர் பண்ணியிருந்த விவசாயி, 'கர்னல்' தேவதாஸ், ஏக்கருக்கு 74 மூட்டை மகசூல் எடுத்தார்ங்கறத நம்பவும் முடியல... நம்பாம இருக்கவும் முடியலை. ஏன்னா, பாரம்பரிய ரகத்துல முப்பது மூட்டை மகசூல் எடுப்பதே, ரொம்பக் கஷ்டம். உடனே கர்னல்கிட்ட பேசி,

விதைநெல்லை வரவழைச்சு போன சம்பா பருவத்தில் போட்டு ஒரு போகம் எடுத்துட்டேன். இப்பவும் போட்டிருக்கிறேன்.

**80% இயற்கை!**

இது வண்டலும் மணலும் கலந்த பூமி. இரண்டரை ஏக்கரில் வாழை, இரண்டு ஏக்கரில் நெல் இருக்கு. பூச்சிக்கொல்லிகளால் வரும் ஆபத்துகளை பசுமை விகடன் மூலமாக தெரிந்துக் கொண்டதால், இயற்கையான முறையில் தயாரிக்கும் பூச்சிவிரட்டிகளை மட்டும்தான் பயன்படுத்திக்கிட்டிருக்கேன். எண்பது சதவிகித அளவுக்கு ரசாயன உரங்களையும் குறைத்துவிட்டேன். பாரம்பரிய நெல் ரகங்களைப் பொறுத்தவரை முழுக்கவே இயற்கை முறையில் தான் சாகுபடி செய்றேன். துளிகூட ரசாயனத்தைச் சேர்ப்பதில்லை.

**சம்பாவில் சாதாரண நடவு!**

இந்தப் பகுதியில், சம்பா பருவத்தில் ஒற்றை நாற்று முறையில் சாகுபடி செய்ய முடியாது. நடவுக்குப் பின் மழை வந்துடுச்சுனா, நாத்து சாய்ஞ்சுடும். அதனால் சாதாரண முறையில்தான் சாகுபடி பண்றேன். ஆரம்பத்தில் 10 கிலோ விதைநெல்தான் கிடைத்தது. அதனால், அரை ஏக்கரில் மட்டும்தான் சாகுபடி செய்தேன்" என்றவர், தான் மேற்கொண்ட சாகுபடி முறை பற்றி விவரித்தார்.

**இயற்கை இடுபொருட்கள் மட்டும்தான்!**

"3 சென்ட் நிலத்தில் நாற்றங்கால் அமைத்தேன். அதில் தொழுவுரத்தைத் தவிர வேறெதையும் போடாமலே, நாத்து நன்றாக வளர்ந்தது. நடவு செய்வதற்க்காக ஒதுக்கின அரை ஏக்கர் நிலத்தில் உழவு ஓட்டி, சவண்டல், வேப்பிலை, பூவரச இலை, வாதமடக்கி இலை ஒவ்வொன்றிலும் 500 கிலோ அளவிற்க்குப் போட்டு, திரும்பவும் ஒரு உழவு ஓட்டி நாத்துகளை நடவு செய்தேன்.தேவையான சமயத்தில் களைகளை எடுத்துவிட்டு, காய்ச்சலும் பாய்ச்சலுமாக தண்ணீர் விட்டேன். மண்புழு உரம், தொழுவுரம், சூடோமோனஸ், அசோஸ்பைரில்லம், பாஸ்போ-பாக்டீரியா இப்படி இயற்கை இடுபொருட்களாக கொடுத்துதான் சாகுபடி செய்தேன்.

**பூச்சி, நோய் தாக்குவதில்லை!**

நடவு செய்து 50-ம் நாள் கதிர் வரும் சமயத்தில் ஒரு கிலோ சூடோமோனஸை 150 லிட்டர் தண்ணீரில் கைத்தெளிப்பான் மூலம் தெளித்தேன். அதில் நல்ல பலன் கிடைத்தது. பூச்சி... நோய் தாக்குதல் என்று எதுவும் இல்லவே இல்லை. அறுவடை சமயத்தில் மூன்றரை அடி உயரத்திற்க்கு பயிர் இருந்தது. ஒவ்வொரு கதிரிலும் 250 நெல்மணிகள் வரை இருந்தது. 130 நாளில் அறுவடை பண்ணிட்டேன். அரை ஏக்கரில் இருபத்தி ஏழரை மூட்டை (60 கிலோ மூட்டை) மகசூல்

கிடைத்தது... அசந்து போயிட்டேன். இடுபொருட்களை கொஞ்சம் அதிகமாக கொடுத்திருந்தால் இன்னமும் கூடுதல் மகசூல் கிடைத்திருக்கும்.

'அறுவடை பண்ணினதுக்கப்பறம் வீட்டுத் தேவைக்கு மட்டும் கொஞ்சம் நெல்லை எடுத்து வைத்துவிட்டு, மீதியை விதைநெல்லாகத்தான் பத்திரப்படுத்தியிருக்கிறேன். இந்த அரிசியில் சாதம் நல்லா சுவையாக இருக்கு. சீக்கிரம் செரிமானம் ஆயிடுது. எங்க பகுதியில் சில நண்பர்களுக்கு விதைநெல்லை கொடுத்திருக்கேன். இந்த போகத்தில் முக்கால் ஏக்கரில் கிச்சடி சம்பாவைத்தான் போட்டிருக்கேன். இப்போ நாத்து நடவு செய்து பதினைந்து நாள்தான் ஆகிறது. 'போன முறையை விட இந்த முறை, அதிக மகசூல் எடுத்துடுவேன்' என்று நம்பிக்கை இருக்கு" என்று சொன்ன பாஸ்கரன், "ரொம்ப நாளாக நான் தேடிகிட்டிருந்த இந்த கிச்சடி சம்பா, 'பசுமை விகடன்' மூலமாகத்தான் எனக்குக் கிடைத்தது. அதற்க்காக என்னிக்கும் நான் நன்றிக் கடன் பட்டிருக்கேன்" என்று நெகிழ்ச்சியோடு சொல்லி, விடை கொடுத்தார்!

**தொடர்புக்கு**
**பாஸ்கரன்,**
**தொலைபேசி: 0431-2625132.**